




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 312 | 4 Pages | 7.6.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 312 | 4 பக்கங்கள் | 7.6.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா**

**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:**

சிறப்பைத்தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

## 50 வயதில் திரிணாமுல் காங்கிரஸ் பெண் எம்.பி. திருமணம்



பெர்லின், ஜூன் 6

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் மகுவா மொய்த்ரா (வயது 50). எம்.பி.யான இவருக்கும் பிஜு ஜனதாதளகட்சியின் எம்.பி.யான பினாகி மிஸ்ராவுக்கும் ஜெர்மனியில் வைத்து திருமணம் நடந்துள்ளது.

இதனை மொய்த்ரா உறுதிப்படுத்தி உள்ளார். இதற்கு முன்பு, வெளிநாட்டில் பார்த்த வேலையை உதறி விட்டு அரசியலில் இணைந்த அவர், முதலில் டென்மார்க் நாட்டை சேர்ந்த பைனான்சியரான லார்ஸ் பிரார்சனை திருமணம் செய்து கொண்டார். பின்னர் அவர்கள் விவாகரத்து பெற்றனர்.

இதன்பின்னர், வழக்கறிஞர் ஜெய் ஆனந்த் தேகத்ராய் என்பவருடன் உறவுமுறையில் இருந்த மொய்த்ரா, 2023ம் ஆண்டு டிசம்பரில் பரிசு, பணம் ஆகியவற்றை பெற்ற விவகாரத்தில் சர்ச்சைக்குள்ளானார். இதனால், மக்களவையில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார். அவருக்கு எதிராக புகார் அளித்ததே ஜெய் ஆனந்த் என தெரிய வந்து மொய்த்ரா அதிர்ச்சியானார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளராக பணியாற்றிய அனுபவம் கொண்ட மொய்த்ரா நாடாளுமன்றத்தில், பா.ஜ.க.வுக்கு எதிராக கடுமையாக பேசி பரபரப்பு ஏற்படுத்தியவர்.

இந்நிலையில், பினாகியை அவர் கரம் பிடித்துள்ளார். இதுபற்றிய புகைப்படம் ஒன்றையும் மொய்த்ரா அவருடைய எக்ஸ் சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ளார். பினாகிக்கு இதற்கு முன் நடந்த திருமணத்தில் ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். இந்த தம்பதிக்கு, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஜாதவ்பூர் தொகுதி எம்.பி. சாயோனி கோஷ் உள்ளிட்ட பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அவர்களுக்கு மொய்த்ரா நன்றி தெரிவித்து கொண்டார்.

## பயண தடையை நீக்குங்கள்... அமெரிக்காவுக்கு உதவிய ஆப்கானிஸ்தான் மக்கள் கோரிக்கை



வாஷிங்டன், ஜூன் 6

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ம் ஆண்டு தலிபான்கள் ஆட்சிக்குவருவதற்கு முன்பு, அங்குள்ள ஆயிரக்கணக்கான உள்ளூர்வாசிகள் அமெரிக்க அரசு, ஊடகம் மற்றும் மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டுவந்தனர். அங்கு தலிபான் ஆட்சி அமைந்த பிறகு அமெரிக்காவுக்கு உதவி செய்தவர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினர். இவர்களில் சிலர் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர்.

அவ்வாறு ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியவர்களை அமெரிக்காவில் குடியமர்த்துவதற்கான சிறப்பு திட்டம் அமல்படுத்தப்பட்டது. இதனிடையே அமெரிக்க அதிபராக பதவியேற்ற டிரம்ப், பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அதன்படி ஆப்கானிஸ்தான் உள்பட 12 நாட்டை சேர்ந்தவர்கள் அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதித்து டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இதனால் அமெரிக்காவுக்கு உதவி செய்த ஆப்கானிஸ்தான் மக்கள் மீண்டும் அமெரிக்காவை விட்டு ஆப்கானிஸ்தானுக்கு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அங்கு சென்றால் தலிபான்கள் தங்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பயண தடை உத்தரவை நீக்க வேண்டும் என அமெரிக்காவுக்கு உதவிய ஆப்கானிஸ்தான் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## நிலவின் வடக்கு பகுதியில் தரையிறங்கும் ஜப்பான் தனியார் ஆய்வு விண்கலம்

டோக்கியோ, ஜூன் 7

இரவு வானத்தை பிரகாசமாக்கும் பூமியின் துணைக் கோளான நிலவு, வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த வானியல் ஆய்வாளர்களால் இடைவிடாது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தொலைநோக்கியில் தொடங்கிய இந்த ஆய்வு பயணம், தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சியால் மனிதர்கள் நேரடியாக நிலவிற்கு சென்று கால் பதிக்கும் அளவிற்கு முன்னேறியது. இருப்பினும் நிலவின் மீதான மனித இனத்தின் பேரார்வம் இன்று வரை தணியவில்லை. நிலவில் கால் பதித்த முதல் மனிதரான நீல் ஆம்ஸ்ட்ராங், "ஒரு மனிதனுக்கு இது மிகச்சிறிய காலடி, மனித இனத்திற்கு இது ஒரு மிகப்பெரிய பாய்ச்சல்" என்றார். அவர் கூறியபடி, விண்வெளி ஆய்வில் மனித இனம் இன்று அளப்பரிய வளர்ச்சிகளை கண்டு வருகிறது. இதுவரை அமெரிக்கா, ரஷியா, சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய 5 நாடுகள் அனுப்பிய விண்கலங்களின் ரோவர்கள் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளன. இதனிடையே, பல்வேறு தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனங்களும் நிலவை ஆய்வு செய்வதற்கான விண்கலங்களை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில், ஜப்பானின் டோக்கியோ நகரை சேர்ந்த ஐஸ்பேஸ் என்ற தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனம், நிலவை ஆய்வு செய்வதற்காக 'ரெசிலியன்ஸ்'(Resilience) என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. இந்த விண்கலம் நிலவின் சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாகவும், தற்போது நிலவின் மேற்பரப்பில் இருந்து 100 கி.மீ. உயரத்தில் விண்கலம் சுற்றி வருவதாகவும் ஐஸ்பேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த விண்கலம் மணிக்கு சுமார் 5,800 கி.மீ. வேகத்தில் நிலவை சுற்றி வருகிறது. இந்த விண்கலம் இன்று நள்ளிரவு நிலவில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலவில் தரையிறங்கிய பிறகு இந்த விண்கலத்தின் ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஆய்வு பணிகளை மேற்கொள்ள உள்ளது. முன்னதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஐஸ்பேஸ் நிறுவனம் நிலவுக்கு அனுப்பிய விண்கலம், தரையிறங்கும்போது நிலவின் மேற்பரப்பில் விழுந்து நொறுங்கியதால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க வேண்டும்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 7

உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உலக சுற்றுச்சூழல் தினம் ஆண்டு தோறும் ஜூன் 5ம் தேதி கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று உலக சுற்றுசூழல் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது:

மக்களுக்கு சுய ஒழுக்கம் அவசியம், குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க வேண்டும். குழந்தைகளின் எதிர்காலம் நாம் செய்யும் செயல்களில்தான் இருக்கிறது. ஒரு ட்ரில்லியன் டாலர் வளர்ச்சி மட்டுமின்றி பசுமை பொருளாதாரமும் நமது கனவாக இருக்க வேண்டும். மஞ்சப்பை திட்டம் அரசின் திட்டமாக இருந்தால்போதாது அது மக்கள் இயக்கமாக மாற வேண்டும்.

காடுதான் மூச்சுவிட உதவுகிற நுறையீரல். காடுகளை பாதுகாப்பதற்கான அவசர தேவையை உணர்ந்து பல ஆண்டுகளாக கவணிக்கபடாமல் இருந்த காலிபணியிடங்களை நிறப்பிய நம்முறைடைய வனத்துறை அமைச்சருக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். வனக்காவலர்கள் நியமன ஆணையை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் தான் காடுகளின் முதுகெலும்பு எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் நமது சுற்றுப்புறத்தை பாதுகாக்கும் ஹீரோக்கள் நீங்கள் தான்.




இந்தியாவிலேயே சுற்றுசூழல் பாதுகாப்புக்காக வேறு எந்த மாநிலத்திலும் இத்தனை திட்டங்கள் இல்லை.

அந்த அளவிற்கு கடந்த 4 ஆண்டுகளாக தொலைநோக்கோடு முன்னொடுப்புகளை செயல்படுத்தி வருகிறோம். இந்தியாவில் ஒருங்கினைந்த சுற்றுச் சூழல் கட்டமைப்பை உருவாக்கினோம். அதன் கீழ் நான்கு முதன்மை இயக்கங்களை அமைத்துள்ளோம்.

முதலாவது தமிழ்நாடு பசுமை இயக்கம் மூலம் 10 கோடிக்கும் மேலான மரக்கன்றுகளை நட்டுள்ளோம். வனப்பரப்பை அதிகரித்துள்ளோம்.

இரண்டாவது தமிழ்நாட்டில் 21 ஈர நிலங்கள் கொண்ட மாநிலம் என சாதனை படைத்துள்ளோம்,

மூன்றாவதாக தமிழ்நாடு காலநிலை திட்டம் மூலம் கார்பன் எமிஷனை கட்டுபடுத்த முக்கியமான பணிகளை செய்து கொண்டு வருகிறோம்.

நான்காவதாக தமிழ்நாடு நெய்தல் மீட்பு திட்டமாக உலக வங்கியுடன் இணைந்து 1625 கோடி மதிப்பிட்டில் முக்கிய கடலோர பகுதியின் தாங்கு திறனை வழுப்படுத்தி வருகிறோம்.

கடந்த 4 ஆண்டுகளில் 7000 ஹெக்டருக்கும் அதிகமான 65 புதிய வனகாப்பகங்களுக்கு சட்டப்பூர்வ பாதிகாப்பு அறிவித்துள்ளோம். அகத்தியன் மலை யானை காப்பகம், தெற்கு காவேரி வனவிலங்கு காப்பகம் , தந்தை பெரியார் வனவிலங்கு காப்பகம் உள்ளிட்ட 7 வன உயிரின சரணாலயங்கள் பாதுகாக்கப்பட்ட வலயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பல்லுயிர்ப் பெருக்கம், காலநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு இடையே வலுவான தொடர்பு உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தொழில் துறைவளர்ச்சியில் முக்கியமானதாக இருக்க வேண்டும். ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதாரம் என்பதோடு, பசுமை பொருளாதாரத்தை உருவாக்குவதே இலக்கு, வீட்டை விட்டு வெளியே செல்லும்போது துணிப்பை, தண்ணீர் பாட்டில் கொண்டு செல்வோம்; மக்களுக்கு சுயஒழுக்கம் அவசியம்; குப்பைகளை தரம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என கூறினார்

## 9 மணி ஆகியும் திறக்கப்படாத பள்ளி... மாணவர்கள் வெளியே காத்திருக்கும் அவல நிலை



திருப்பத்தூர் , ஜூன் 7

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர், ஏ.கஸ்பா பகுதியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சுமார் 468 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இதில் பொறுப்பு தலைமை ஆசிரியர் ஜான்சி சந்திரவதி, மூன்று தற்காலிக ஆசிரியர்கள் உட்பட16 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் பள்ளிகள் வழக்கம் போல் 8.30 மணிக்குள்ளாக திறக்கப்பட வேண்டிய நிலையில் நேற்று காலை 9:00 மணிக்கு மேல் ஆகியும் பள்ளி திறக்கப்படாததால் மாணவர்கள் சுமார் அரை மணி நேரத்துக்கு மேலாக பள்ளிக்கு வெளியில் காத்திருக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அரை மணி நேரத்திற்கு பின் வந்த ஒரே ஒரு ஆசிரியர் எத்திராஜ் என்பவர் மட்டும் பள்ளியை திறந்ததால் மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. மேலும் 9. 45 மணிக்குள்ளாக ஓரிரு ஆசிரியர்கள் மட்டுமே வந்தனர்.

ஆனால் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் ஆர்வம் காட்டாமல் அலட்சியமாக செயல்பட்டு தாமதமாக வந்து பள்ளியை திறந்ததால் மாணவர்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

பள்ளிக்கல்வித்துறை மாணவர்களின் கல்வியின் வளர்ச்சிக்காக பள்ளிகளில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி மாணவர்களின் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## பெங்களூரு கூட்ட நெரிசலில் சிக்கி தமிழர்கள் உள்ளிட்ட 11 பேர் பலி: எடப்பாடி பழனிசாமி இரங்கல்

பெங்களூரு, ஜூன் 7

அகமதாபாத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெங்களூரு அணி வெற்றி பெற்றது. 18 ஆண்டுகளுக்குப் பின்னர், முதல் முறையாக பெங்களூரு அணி கோப்பையை வென்றுள்ளதால், அந்த அணியின் ரசிகர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் பெங்களூரு அணி வீரர்களுக்கு சின்னசாமி மைதானத்தில் நேற்று பாராட்டு விழா நடத்தப்பட்டது. முன்னதாக கர்நாடக பேரவை மாளிகை முதல் சின்னசாமி மைதானம் வரை பெங்களூரு அணி வீரர்களின் பேருந்து பேரணி நடத்தப்பட்டது.

பெங்களூரு அணியை வரவேற்க மைதானத்தின் முன்பு ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டு இருந்தனர். இதனிடையே, சின்னசாமி மைதானத்தின் 6வது கேட் பகுதியில் அத்துமீறி பலர் உள்ளே நுழைய முயன்றனர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 20க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



இந்த நிலையில், இந்த சம்பவம் குறித்து பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

பெங்களூருவில் கூட்டநெரிசலில் சிக்கி தமிழர்கள் உள்ளிட்ட 11 பேர் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல். மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர் பூரண உடல்நலம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். என்று பதிவிட்டுள்ளார்.

## நாளை தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்




சென்னை, ஜூன் 7

தமிழகசட்டசபைதேர்தலுக்குஇன்னும் 10 மாதங்களே இருக்கும் நிலையில், அதை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான தி.மு.க. முன்கூட்டியே தயாராகிவருகிறது. அதன் ஒருபகுதியாக, கடந்த 1ந் தேதி தி.மு.க. பொதுக்குழு கூட்டம் மதுரையில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஜூன் 7ந் தேதி (நாளை மறுநாள்) தி.மு.க. மாவட்ட செயலாளர்கள், எம்.பி. எம்.எல்.ஏ.க்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் நடைபெற இருக்கிறது.

காணொலிக்காட்சி வழியாக காலை 10.30 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்தில், கட்சியின் தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் நிர்வாகிகள் மத்தியில் பேச இருக்கிறார். அப்போது, சட்டமன்ற தேர்தலுக்கான முன்னெடுப்புகள் குறித்து ஆலோசனை வழங்க இருக்கிறார். இதற்கான அறிவிப்பை கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் 762025 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு காணொலிக்காட்சி வாயிலாக நடைபெறும். அதில், மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படிகேட்டுக்கொள்கிறேன்.கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை தொடர்பாக விவாதிக்கப்பட இருக்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# லாரி மீது ஆம்னி பஸ் மோதி விபத்து 10 பேர் காயம்

கள்ளக்குறிச்சி, ஜூன் 7

சென்னையில் இருந்து பொள்ளாச்சி நோக்கிச் சென்ற ஆம்னி பஸ் ஒன்று உளுந்தூர்பேட்டை புறவழிச்சாலையில் விருதாச்சலம் சாலை மேம்பாலம் அருகே சென்று கொண்டிருந்தது.

அப்போது அதே சாலையில் முன்னால் லாரி ஒன்று சென்றுகொண்டிருந்தது.

இந்த நிலையில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் முன்னால் சென்ற லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் எதிர்பாராதவிதமாக 10 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து காரணமாக பாலத்தின் மேல் வாகனப்போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டதால் சென்னை திருச்சி நெடுஞ்சாலையில் மெதுவாக வாகனங்கள் ஊர்ந்து சென்றன். இதனால் சிறிது போக்குவரத்து நெறிசல் ஏற்பட்டது.

# நீலகிரி: வீட்டுக்குள் நுழைய முயன்ற சிறுத்தையை விரட்டிய வளர்ப்பு நாய்



நீலகிரி, ஜூன் 7

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே நம்பியார் குன்னு புதுச்சேரி பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீகுமார். இவர் நேற்று முன்தினம் வீட்டின் அருகே தோட்டத்திற்கு நடந்து சென்றார். அப்போது எதிரே சிறுத்தை ஒன்று ஆக்ரோஷமாக நடந்து வந்தது.

இதை கண்ட அவர் அலறியடித்து ஓட்டம் பிடித்தார். சத்தம் கேட்டு அப்பகுதி மக்கள் ஓடி வந்து கூச்சலிட்டதை அடுத்து, சிறுத்தை அங்கிருந்து ஓடியது.

இந்தநிலையில் நேற்று பிரபா வீட்டின் கதவை திறந்த போது, சிறுத்தை வாசலில் நின்றது.

இதனால் அவர் உடனே கதவை அடைத்து விட்டார். பின்னர் சிறுத்தை அங்கிருந்து சென்றது. இது தொடர்பாக கூடலூர் கோட்ட வன அலுவலர் வெங்கடேஷ் பிரபு உத்தரவின் படி, வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதே போல் எருமாடு அருகே பனஞ்சிறா நேதாஜி நகரில் சந்தோஷ் என்பவரது வீட்டுக்குள் சிறுத்தை நுழைய முயன்றது.

அப்போது நுழைவுவாயிலில் கட்டப்பட்டு இருந்த வளர்ப்பு நாய் சிறுத்தையை பார்த்து குரைத்தவாறு விரட்டியது.

இதனால் சிறுத்தை சுற்றுச்சுவர் மீது குதித்து அங்கிருந்து ஓடியது. தகவல் அறிந்த வனத்துறையினர், பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வீட்டு வேலை செய்யாததை தந்தை கண்டித்ததால் கல்லூரி மாணவி விஷம் குடித்து தற்கொலை

தூத்துக்குடி ஜூன் 7

தூத்துக்குடி மாவட்டம் நாலாட்டின்புத்தூர் அருகேயுள்ள சென்னயம்பட்டி தெற்கு தெருவை சேர்ந்தவர் முத்துசாமி. இவரது மகள் கார்த்திபிரியா (20 வயது). இவர் கோவில்பட்டி அருகே உள்ள தனியார் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். கல்லூரி முடிந்து வீட்டிற்கு வரும் இவர், வீட்டு வேலைகளை செய்யாமல் இருந்து வந்ததாக



கூறப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவத்தன்றும் அவர் வீட்டு வேலை செய்யாமல் இருந்ததாக கூறப்படுகிறது.

இதை அவரது தந்தை கண்டித்துள்ளார்.

இதனால் அவர் மனமுடைந்த கார்த்திபிரியா வீட்டில் பெற்றோர் வெளியே சென்றிருந்த நேரத்தில் விஷம் குடித்து மயங்கி கிடந்துள்ளார். இதுகுறித்து அக்கம் பக்கத்தினர் கொடுத்த தகவலின் பேரில் வீட்டிற்கு சென்ற பெற்றோர் அவரை மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து தகவல் அறிந்த நாலாட்டின்புத்தூர் போலீசார் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுகாதாரமான முறையில் அன்னதானம்: தமிழகத்தில் 523 கோவில்களுக்கு தர சான்றிதழ்

சென்னை ஜூன் 7

பக்தியுடன்கோவிலுக்கு வரும் பக்தர்கள் பசியுடன் செல்லக்கூடாது என்பதற்காக கோவில்களில் அன்னதானம் திட்டம் கொண்டு வரப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 13 கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 764 கோவில்களில் ஒரு வேளை அன்னதானமும் நடந்து வருகிறது.

கோவில்களில் தயாரித்து வழங்கப்படும் இத்தகைய பிரசாதம், அன்னதானம்தரத்துடன்இருப்பதை



இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் அவ்வப்போது ஆய்வு செய்து, தர சான்றிதழ்களை வழங்கி வருகிறது.

அந்தவகையில், இந்தியா முழுவதும் கோவில்களில் ஆய்வு மேற்கொண்டுவரும் இந்திய உணவு பாதுகாப்பு தர ஆணையம் தமிழகத்தில் 523 கோவில்களுக்கு தர சான்றிதழ்களை வழங்கியுள்ளது. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகத்தில் தான் மிக அதிகமான தர சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மீதம் இருக்கும் கோவில்களுக்கும் தரசான்றிதழ் பெறுவதற்கான முயற்சியை தற்போது இந்து சமய அறநிலையத் துறை மேற்கொண்டுள்ளது.

கோவில்களை சுத்தமாக வைத்துக்கொள்ளவும், பக்தர்களுக்கு சுகாதாரமான குடிநீரை வழங்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கோவில்களுக்கு சொந்தமான அசையா சொத்துக்களில் இருந்து ரூ.1,054.40 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவான வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 7

திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் பகுதியில் கடந்த 2015ம் ஆண்டு அடிதடி வழக்கில் ஈடுபட்ட நாரணம்மாள்புரத்தை சேர்ந்த மகாராஜன் (வயது 30) கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளியே வந்தார். இதனையடுத்து அவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த ஒரு மாதமாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால், அவருக்கு நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து மகாராஜனை முன்னீர்பள்ளம் காவல்துறையினர் தேடி வந்த நிலையில் இன்று (5.6.2025) கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# உலக சுற்றுச்சூழல் தினம்: பள்ளி மாணவர்களுக்கு ஓவிய போட்டி எஸ்.பி. பாராட்டு



திருநெல்வேலி ஜூன் 7

திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாலாமடை அரசு மேல்நிலைப் பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி காவல் துறை சார்பாக ஓவிய போட்டி நடத்தப்பட்டது. ஓவிய போட்டியில் பங்கேற்ற பள்ளி மாணவ, மாணவிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஓவியங்கள் வரைந்தனர். இப்போட்டியானது சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக நடத்தப்பட்டது.

இப்போட்டியில் பங்குபெற்று வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் நேரில் அழைத்து, அவர்களின் கலை திறமையை பாராட்டும் விதமாக சான்றிதழ் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்வின்போது திருநெல்வேலி மாவட்ட தலைமையகம் ஏ.டி.எஸ்.பி பாலசுப்பிரமணியன், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்புபிரிவு ஏ.டி.எஸ்.பி. சண்முகம், சைபர் கிரைம் பிரிவு ஏ.டி.எஸ்.பி. முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தூத்துக்குடி: பனை மரத்திலிருந்து தவறி விழுந்த மாணவன் உயிரிழப்பு



தூத்துக்குடி ஜூன் 7

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே, பசுவந்தனையை அடுத்துள்ள கோவிந்தம்பட்டி வடக்குத் தெருவைச் சேர்ந்த எட்டுராஜ் மகன் அருண்சந்தோஷ் (வயது 17) பிளஸ் 1 வகுப்பில் ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறாததால், கோவில்பட்டி முத்துநகரில் உள்ள அருண்பிரகாஷ் என்பவரிடம் டியூஷன் படித்து வந்துள்ளான்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அருண்பிரகாஷ் கருங்காலிப்பட்டியில் உள்ள தனது தோட்டத்துக்கு அருண்சந்தோஷ், அவரது நண்பா ஆகாஷ் ஆகியோருடன் சென்றுள்ளான். அங்கு அருண்சந்தோஷ் பனைமரத்தில் ஏறி நுங்கு வெட்டியபோது தவறி கீழே விழுந்துள்ளான். இதில் காயமடைந்த அந்த மாணவனை மீட்டு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி செய்த பின்னர் தீவிர சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அந்த மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான். இதுகுறித்து நாலாட்டின்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

# திருநெல்வேலி எஸ்.பி. அலுவலகத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் உறுதிமொழி

திருநெல்வேலி ஜூன் 7

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் எஸ்.பி. சிலம்பரசன் தலைமையில் போலீசார் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் உலக சுற்றுச்சூழல் தினம் உறுதிமொழி எடுத்தனர். அப்போது அவர்கள் அனைவரும், "இவ்வுலகில் வாழும் பலதரப்பட்ட வாழ்வுயிர்களில் ஒருவனாகிய நான், இவ்வுலகில் வாழும் குடிமக்களின் வாழ்க்கைக்கான ஆதாரமாக திகழும் சுற்றுச் சூழலின் முக்கியத்தை உணர்ந்து, விலங்குகள்,



தாவரங்கள் மற்றும் இதர வாழ்வுயிர்களும் இப்புவியில் இணைந்து உயிர்வாழ பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்கப் பாடுபடுவேன் என்றும், சூழலியல் பராமரிப்பின் பயன்களையும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் செயல்களின் பலன்களையும் மக்களுக்கு பயிற்றுவிப்பேன் என்றும், மக்கும் மக்கா குப்பையை பிரித்து மண்புழு உரம் தயாரித்து மண் வளத்தை பெருக்குவேன் என்றும், சுற்றுச் சூழலிற்கும் பிற உயிரினங்களுக்கும் தீங்கு அளிக்கும் எந்தவொரு பொருளுக்கும் இம்மண்ணில் இடம் தர மாட்டேன் என்றும், பொறுப்புள்ள ஒரு மனிதனாய், சுற்றுச் சூழலுக்கு எந்த வித களங்கமும் மாசும் ஏற்படாத வகையில் சமாதான சக வாழ்வினை மேற்கொள்வேன் என்றும் உறுதி கூறுகிறேன்" என்று கூறி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# தூய்மை இயக்கத்தின் கீழ் அரசு அலுவலகங்களில் குப்பைகளை சேகரிக்கும் பணி உதயநிதி ஸ்டாலின் ஆய்வு

சென்னை, ஜூன் 7

தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பல்வேறு வகையான கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக தனித்தனியாக சேகரிக்கும் பணி குறித்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட கலெக்டர்களுடன் இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தூய்மை தமிழ்நாடு சார்பில் முதற்கட்டமாக, சென்னை தலைமைச் செயலகம் உள்பட மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களை சுத்தம் செய்யும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகள், மின்னணு கழிவுகள், உலோகக் கழிவுகள், காகித கழிவுகள், கண்ணாடி கழிவுகள், பயன்படுத்த இயலாத மரத்தளவாடங்கள் போன்ற பல்வேறு வகையான கழிவுகளை சேகரிக்கும் மாபெரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்றஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும்



உள்ள மாவட்டங்களில், அரசு அலுவலகங்களில் பல்வேறு வகையான குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்காக தனித்தனியாக சேகரிக்கும் பணி குறித்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட கலெக்டர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். இதன்பிறகு உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

"சென்ற சட்டப்பேரவை கூட்டத்தொடரின்போது முதல்அமைச்சர் உத்தரவின் பேரில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தூய்மையாக்க வேண்டும், குப்பை மேலாண்மை சரியாக செய்யவேண்டும் என்பதற்காக, தூய்மை மிஷன் என்ற திட்டத்தினை முதல் அமைச்சரின் உத்தரவின் பேரில் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் சார்பாக மானியக் கோரிக்கையில் அறிவித்தோம். இதற்காக முதல்அமைச்சர் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்.

இதன் முதல்படியாக, இன்றைக்கு (World Environment Day) உலகசுற்றுச்சூழல் தினமான இன்று நம்முடைய மாநிலத்திலுள்ள 38 மாவட்டங்களிலுள்ள கிட்டத்தட்ட 1,100 அரசு அலுவலகங்களில் பல்வேறு வகையான குப்பைகளை கண்டறிந்து சேகரிக்கின்ற இந்த மாபெறும் திட்டத்தை இன்றைக்கு துவங்கி வைத்திருக்கிறோம். நேற்றும் இன்றைக்கும் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

38 மாவட்டங்களிலும் நடக்கக்கூடிய அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும், அனைத்து மாவட்ட கலெக்டர்களிடம் பேசுவதற்கும் மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில் ஒரு கட்டளை மையம் (வார் ரூம்) உருவாக்கியிருக்கின்றோம்.

இதுவரைக்கும், சுமார் 300 டன் அளவுக்கு குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்த குப்பைகளை சட்டவிதிகளின்படி அப்புறப்படுத்துவதற்கு (Standard Operating Procedure) உரிய வழிகாட்டு நெறிமுறைகளும் அந்தந்த மாவட்ட கலெக்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நாட்களில் இந்த திட்டம் எப்படி செயல்படுகிறது என்று பார்த்துவிட்டு, அடுத்தகட்டமாக, கிராம பஞ்சாயத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றிலும் இந்த திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கு இன்னும் 10 நாட்களில், அனைத்து அரசு அலுவலகங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு முதல்அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து, இந்த திட்டத்தில் பொது மக்கள் அனைவரும் பங்குபெற்று தூய்மையான தமிழ்நாட்டை நாம் அனைவரும் சேர்ந்து உருவாக்குவோம் என்று இந்த திட்டத்தின் மூலமாக, அரசின் சார்பாக பொதுமக்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலில் 9 கருட சேவை

தூத்துக்குடிஜூன் 7

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி ஆதிநாதா ஆழ்வார் கோவில், நம்மாழ்வாரின் அவதார தலமாகும். இக்கோவிலில் நம்மாழ்வாரின் அவதார தினமான வைகாசி விசாக நட்சத்திரத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் திருவிழா நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டு திருவிழா கடந்த மாதம் 31ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் ஐந்தாம் நாளில் சுவாமி நம்மாழ்வார், நவ திருப்பதி பெருமாள்களுக்கு ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவில் முன்பு மங்களாசாசனம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. பின்னர் இரவு 11 மணியளவில் 9 பெருமாள்களும் கருட வாகனத்தில் எழுந்தருளும் கருட சேவை நடந்தது. ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான், நத்தம் எம்இடர்கடிவான், திருப்புளியங்குடி காய்சினிவேந்தன், தொலைவில்லிமங்கலம் செந்தாமரைக்கண்ணன், இரட்டை திருப்பதி தேவபிரான், பெருங்குளம் மாயக்கூத்தன், தென்திருப்பேரை நிகரில் முகில் வண்ணன், திருக்கோளூர் வைத்தமாநிதி பெருமாள், ஆழ்வார்திருநகரி பொலிந்து நின்ற பிரான் ஆகியோர் கருட வாகனங்களிலும், சுவாமி நம்மாழ்வார் அன்னவாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி கொடுத்தனர். அதன் பின்னர் வீதிஉலா வந்தனர். இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். 8ம் தேதி விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நடைபெறுகிறது. 9ம் தேதி தீர்த்தவாரியுடன் விழா நிறைவடைகிறது.

# கடந்த நிதியாண்டில் 1.36 கோடி மரங்கள் நட்டு காவேரி கூக்குரல் இயக்கம் சாதனை



கோயம்புத்தூர் ஜூன் 7

ஈஷா அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈஷா காவேரி கூக்குரல் இயக்கம், கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் 34,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட விவசாய நிலங்களில் 1.36 கோடி மரக்கன்றுகளை விவசாயிகள் மூலம் அவர்களின் நிலங்களில் நடவு செய்து பிரம்மாண்ட சாதனை படைத்துள்ளது. இதில் தமிழகத்தில் மட்டும் 1.21 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும் 50,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடந்த ஆண்டு இந்த சுற்றுச்சூழல் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நடப்பு நிதியாண்டில் (2025 2026) தமிழகத்தில் மட்டும் 1.21 கோடி மரக்கன்றுகளை விவசாய நிலங்களில் நட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இதன் தொடக்க விழா உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர், பத்தலப்பள்ளியில் உள்ள செயின்ட் பீட்டர் மருத்துவக் கல்லூரியில் இன்று (05062025) நடைபெற்றது. இதனுடன் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, காவேரி கூக்குரல் இயக்கத்தின் சார்பாக 'ஒரு கிராமம் ஒரு அரச மரம்' திட்டத்தின் மூலம் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அரச மரங்கள் நடப்பட்டன.

இதில் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், ஓசூர் சட்ட மன்ற உறுப்பினர் பிரகாஷ், ஓசூர் மாநகர மேயர் சத்யா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக சத்குரு தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "முறையான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகள் மூலம் வளம் இழந்த நிலத்தை மீண்டும் வளமாக்க முடியும் என்பதை காவேரி கூக்குரல் இயக்கம் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது. மண் மற்றும் நீரால் ஊட்டம் பெறும் அனைவரும் இந்த இயக்கத்தில் கட்டாயம் பங்கெடுக்க வேண்டும்" என கூறியுள்ளார்.

ஈஷா காவேரி கூக்குரல் வியக்கம் மூலம் 2024 ஆம் ஆண்டில், உலக சுற்றுச்சூழல் தினம் (ஜூன் 5), வன மகோற்சவ வாரம் (ஜூலை 17), காந்தி ஜெயந்தி (அக்டோபர் 2), மற்றும் உலக மண் தினம் (டிசம்பர் 5) போன்ற முக்கிய நாட்களில், 506 மரம் நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, மொத்தம் 10 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

ஈஷா நர்சரிகள் மூலம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் குறைந்த விலையில் 3 ரூபாய்க்கு வழங்கப்படுகின்றன. இதற்காக கடலூரில் 85 லட்சம் உற்பத்தி திறன் கொண்ட ஒரு நர்சரியும், திருவண்ணாமலையில் 15 லட்சம் உற்பத்தி திறன் கொண்ட ஒரு நர்சரியும் இவ்வியக்கம் மூலம் செயல்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகள் தமிழ்நாட்டில் 40 விநியோக நர்சரிகள்மூலம்விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு ஈஷா அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

# காமராஜரின் பெயரில் மாபெரும் நூலகம் முதல்வருக்கு செல்வப்பெருந்தகை பாராட்டு



சென்னை, ஜூன் 7

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, இலவச கல்வி வழங்கிய பெருந்தலைவர் காமராஜரின் பெயரில் திருச்சியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்துடன் அமைக்கப்படவுள்ள மாபெரும் நூலகத்திற்கு காமராஜர் பெயர் சூட்டிய தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினை பாராட்டுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மூவாயிரம் கோயில்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில்குடமுழுக்கு செய்து சாதனை படைத்து ஆன்மீகப் புரட்சி செய்திருக்கிற தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினையும், அதனை செயல்படுத்திய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவையும் மனதார பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் மதநல்லிணக்கத்தை போற்றுகிற வகையில், மதச்சார்பற்ற அரசாக செயல்படுவதை இந்நிகழ்வு மேலும் உறுதி படுத்துகிறது.

இதன்மூலம் விஷம பிரச்சாரம் செய்து வருகிற ஆர்.எஸ்.எஸ்., சங்பரிவாரங்களுக்கு மிகப்பெரிய அளவில் பதிலடி கொடுக்கின்றவகையில்தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

அதேபோல, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்திற்குஉரியநிதியை ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணித்ததற்காக ஏற்கனவே வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தோம். இன்று தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்திற்கு ஒரு நாள் ஊதியமான 319 ரூபாயை 336 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், இதனால் 88 லட்சத்து 16 ஆயிரத்து 448 பேர் பயனடைகின்றனர். கடந்த ஆண்டு 100 நாள் வேலை திட்டத்திற்கு ரூபாய் 2900 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் சம்பளத் தொகை போக, பொருட்கள் வாங்கியதற்காக வழங்க வேண்டிய ரூபாய் 1400 கோடியை மத்திய பா.ஜ.க. அரசு நிலுவையில் வைத்துள்ளது. இதனை உடனடியாக விடுவிக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பஸ் சரக்கு வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து ஒருவர் உடல் நசுங்கி பலி



விழுப்புரம், ஜூன் 7

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அடுக்கம்கிராமத்தில் இன்று காலை பாண்டிச்சேரியில் இருந்து கண்டாச்சிபுரம் வழியாக திருவண்ணாமலை நோக்கி சரக்கு வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது. அதேபோல் திருவண்ணாமலையில் இருந்து அரசு பஸ் ஒன்றும் கண்டாச்சிபுரம் நோக்கி வந்துகொண்டிருந்தது.

இந்த நிலையில் அடுக்கம் வளைவுப் பகுதியில் பஸ்சும், சரக்கு வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் சரக்கு வாகன டிரைவர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். பஸ் மோதியதில் வாகனத்தின் முன்பகுதி அப்பளம் போல் நொறுங்கியது.

விபத்து குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் ஜேசிபி எந்திரம் மூலம் இரண்டு வாகனத்தையும் அப்புறப்படுத்தி வாகனத்தில் சிக்கி இருந்த டிரைவர் முருகானந்தத்தை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இதனையடுத்து சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த கண்டாச்சிபுரம் போலீசார் விபத்து தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குடிநீர் வாரியத்தில் ஆண்டுக்கு ரூ.90 கோடி ஊழல்: விசாரணைக்கு ஆணையிட வேண்டும் அன்புமணி ராமதாஸ்



சென்னை ஜூன் 7

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டியஊதியத்தை 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை குறைத்துக் கொடுப்பதன் மூலம் ஆண்டுக்கு ரூ.90 கோடி ஊழல் நடைபெறுவதாக எழுந்திருக்கும் குற்றச்சாட்டு அதிர்ச்சியளிக்கிறது. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஊழல் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் அதற்கு காரணமானவர்கள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது கண்டிக்கத்தக்கது.

குடிநீர் வாரியத்தில் மின்னியலாளர்கள் (எலக்ட்ரீஷியன்கள்), நீரேற்றும் மோட்டார் இயக்குபவர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் என மொத்தம் 11,597 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் குடிநீர் வாரியத்தால் நேரடியாக நியமிக்கப்படாமல், ஒப்பந்ததாரர்கள் மூலம் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கான ஊதியம் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டு அவர்கள் மூலமாக பணியாளர்களுக்கு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.15,401 அல்லது அதற்கும் கூடுதலான தொகையை பெற்றுக் கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் அதில் ரூ.7,500 முதல் ரூ.9,800 வரை மட்டுமே ஊதியமாக வழங்கிவிட்டு மீதத்தொகையை சுருட்டி விடுகின்றனர் என்பது தான் குற்றச்சாட்டு ஆகும்.

இந்த வகையில் மாதத்திற்கு ரூ.7.5 கோடி வீதம் ஆண்டுக்கு ரூ.90 கோடி சுருட்டப்படுகிறது. தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய இந்தத் தொகையை அதிகாரிகளும், ஒப்பந்ததாரர்களும் பகிர்ந்து கொள்கின்றனர். இது தொடர்பாக பல முறை புகார் அளித்தும் கூட இந்த ஊழலுக்கு முடிவு கட்டப்படவில்லை. முந்தைய ஆட்சியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின்போது முதல் அமைச்சரே சுட்டிக்காட்டியும் கூட இந்த ஊழல் தடுக்கப்படவில்லை; ஊழலுக்கு காரணமானவர்களும் தண்டிக்கப்படவில்லை. அந்த அளவுக்கு ஊழல் கூட்டணி மிகவும் வலிமையாக இருக்கிறது.

1971ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் சென்னை மாநகராட்சியில் மலேரியா ஒழிப்புக்கான தினக்கூலி பணியாளர்களை கூடுதலாக நியமித்ததாகக் கூறி, அவர்களின் ஊதியத்தை அன்றைய சென்னை மாநகராட்சி ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் சுருட்டிக் கொண்டனர். அப்போது ஊதியம் முழுமையாக சுருட்டப்பட்ட நிலையில், இப்போது ஊதியத்தில் பாதி சுருட்டப்பட்டுள்ளது. குடிநீர் வாரிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கான ஊதியம் வங்கிக் கணக்குகள் மூலம் வரவு வைக்கப்பட வேண்டும் என்பது விதி. அவ்வாறு செய்தால் மோசடி அம்பலமாகி விடும் என்பதற்காக ஊதியம் ரொக்கமாக வழங்கப்படுகிறது.

ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது தொடர்பான ஆவணங்களை வழங்கும்படி தொழிலாளர் நலத்துறை, தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆகியவற்றின் அதிகாரிகள் பலமுறை கோரியும் அவற்றை குடிநீர்வாரிய செயற்பொறியாளர்களும், ஒப்பந்ததாரர்களும் வழங்க மறுக்கின்றனர். இதன் மூலம் ஊழலுக்கான ஆதாரங்களை அழிக்க அதிகாரிகளும், ஒப்பந்ததாரர்களும் முயல்கின்றனர். இதை அரசு வேடிக்கை பார்ப்பது ஊழலுக்கு துணை போவது ஆகும்.

ஒப்பந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்தை சுருட்டுவதைப் போன்ற கொடுங்குற்றமும், பாவமும் உலகில் இல்லை. இந்த ஊழல் குறித்து நியாயமான விசாரணைக்கு தமிழக அரசு ஆணையிட வேண்டும். இதன் பின்னணியில் இருப்பவர்கள் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களவை தேர்தல்: ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் வேட்புமனு தாக்கல் செய்தார்

சென்னை ஜூன் 7

தமிழக மாநிலங்களவை எம்.பி.க்களான ம.தி.மு.க.வைச் சேர்ந்த வைகோ, தி.மு.க.வைச் சேர்ந்த வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ்,அ.தி.மு.க.வின் சந்திரசேகர் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது.

எனவே அதற்கான தேர்தல், வருகிற 19ந் தேதி நடக்கிறது.

இதனையடுத்து மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. சார்பாக வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. ஒரு இடத்தை மக்கள் நீதி மய்யத்திற்கு தி.மு.க. ஒதுக்கி உள்ளது. அதில் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் போட்டியிடுவார் என்று அந்த கட்சி அறிவித்துள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 2ந்தேதி தொடங்கியது. இந்த நிலையில் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில், சென்னை தலைமை செயலகத்தில் பேரவை கூடுதல் செயலாளரிடம் கமல்ஹாசன் தனது வேட்புமனுவை சமர்ப்பித்தார்.

மேலும் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களான வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகியோரும் தங்கள் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். இந்த நிகழ்வின்போது துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டணி கட்சி தலைவர்கள் செல்வப்பெருந்தகை, திருமாவளவன் ஆகியோர் உடன் இருந்தனர்.


# மாநிலங்களவை தேர்தல்: ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் வேட்புமனு தாக்கல் செய்தார்

சென்னை ஜூன் 7

தமிழக மாநிலங்களவை எம்.பி.க்களான ம.தி.மு.க.வைச் சேர்ந்த வைகோ, தி.மு.க.வைச் சேர்ந்த வில்சன், சண்முகம், முகமது அப்துல்லா, பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ்,அ.தி.மு.க.வின் சந்திரசேகர் ஆகிய 6 பேரின் பதவிக்காலம் அடுத்த மாதம் முடிவடைகிறது.

எனவே அதற்கான தேர்தல், வருகிற 19ந் தேதி நடக்கிறது.

இதனையடுத்து மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. சார்பாக வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. ஒரு இடத்தை மக்கள் நீதி மய்யத்திற்கு தி.மு.க. ஒதுக்கி உள்ளது. அதில் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன் போட்டியிடுவார் என்று அந்த கட்சி அறிவித்துள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 2ந்தேதி தொடங்கியது. இந்த நிலையில் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில், சென்னை தலைமை செயலகத்தில் பேரவை கூடுதல் செயலாளரிடம் கமல்ஹாசன் தனது வேட்புமனுவை சமர்ப்பித்தார்.

மேலும் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களான வில்சன், கவிஞர் சல்மா, சிவலிங்கம் ஆகியோரும் தங்கள் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். இந்த நிகழ்வின்போது துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கூட்டணி கட்சி தலைவர்கள் செல்வப்பெருந்தகை, திருமாவளவன் ஆகியோர் உடன் இருந்தனர்.


# பாஜக அணியில் பாமக வரும் நயினார் நாகேந்திரன்



மதுரை, ஜூன் 7

மதுரையில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

இரண்டு நாட்கள் பயணமாக உள்துறை அமைச்சர் அமித் ஷா மதுரை வருகிறார். மீனாட்சியம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்யும் அமித் ஷா, அதனைத் தொடர்ந்து பா.ஜ.க. நிர்வாகிகளை சந்திக்கிறார். அமித்ஷா அன்புமணி சந்திப்பு குறித்து இதுவரை திட்டம் இல்லை. ராமதாஸ் அன்புமணி பேச்சுவார்த்தையில் பா.ஜ.க.வுக்கு சம்பந்தமில்லை. பாஜக அணியில் பாமக வரும்.

குருமூர்த்தி நாட்டில் நல்ல விஷயங்கள் நடக்க வேண்டும் என முயல்கிறார். அவர் ஒரு நலம்விரும்பி. தே.மு.தி.க.வும் எங்கள் கூட்டணியில் இணையும் என நம்பிக்கை உண்டு. மதுரையில் மத்திய அமைச்சர்அமித்ஷா பங்கேற்கும் கூட்டத்தில் கூட்டணி கட்சியினர் பங்கேற்க மாட்டார்கள். திமுகவிற்கு ஷா என்றாலே பயம் என்றார்.

# மதுரையில் நடப்பது சங்கிகள் மாநாடு அமைச்சர் சேகர்பாபு விமர்சனம்



சென்னை, ஜூன் 7

சென்னையில் அமைச்சர் சேகர்பாபு இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"திமுக ஆட்சியில் 175 கோடி அளவிற்கு 134 புதிய தேர்கள் 130 கோயில்களில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 75 தேர்க்களை புதுப்பிக்கும் பணி நடைப்பெற்று வருகிறது. 5 தங்கத் தேர் அறிவிக்கப்பட்ட நிலையில் பவானியம்மன் கோயிலில் தங்கத் தேர் பக்தர்களுக்காக அளிக்கப்பட்டுள்ளது. 9 கோயில்களுக்கு வெள்ளித்தேர் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் காளிகாம்பாள், நெல்லையப்பர், திருத்தணி கோயில்களில் வெள்ளித் தேர் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. திமுக ஆட்சியில் தற்போது வரை 3 ஆயிரம் குடமுழுக்குகள் நடைப்பெற்றுள்ளன. இன்று மட்டும் 24 கோயில்கள், 8ம் தேதி 74 கோயில்களில் என இந்தாண்டு இறுதிக்குள் 3,500 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும். 4,000 கோயில்களின் பணிகளை நிறைவு செய்யும் நோக்கத்தோடு இந்து சமய அறநிலையத்துறை செயல்படுகிறது.

திருச்செந்தூர் திருக்கோயில் பணிகளைப் பொறுத்தவரை பேருந்து நிறுத்தங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. திருச்செந்தூர் கோயிலில் ரூ.400 கோடிக்கான திருப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன. இந்த மாதத்திற்குள் முடிக்கக் கூடிய திருப்பணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. குடமுழுக்கு நடைபெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பல்வேறு திட்டமிடல்கள் நடைப்பெற்றுள்ளன. திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு நேர விவகாரத்தில் நீதி அரசுப் பக்கம் தான் உள்ளது.

மதுரையில் இந்து முன்னணி சார்பில் நடைபெற உள்ள முருக பக்தர்கள் மாநாடு, சங்கிகள் நடத்த உள்ள மாநாடு, அரசியல் மாநாடு. அதற்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அரசியல் தேவைக்காக மதத்தால், இனத்தால் மக்களை பிளவுப்படுத்த நடத்த கூடிய மாநாடு. தமிழிசை சிறந்த அறிவாளி. அவரது ஆலோசனைகள் மூலம்தான் பாஜக போட்டியிட்ட தேர்தல்களில் தோல்வியைத் தழுவுகிறது. மத்திய அரசுக்கு தமிழிசை சவுந்தரராஜன் ஆலோசனை வழங்க வேண்டும்" என்றார்.

# கோட்டூரில், குடிநீர் குழாய் உடைப்பு சீரமைப்பு




திருவாரூர், ஜூன் 7

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஊராட்சி அலுவலகம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து சன்னதி தெரு, ஜீவா தெரு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த குடிநீர் செல்லும் குழாயில் யூனியன் அலுவலகம் எதிரில் மெயின் ரோட்டில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாக சாலையில் சென்றது. இதன் காரணமாக அந்த பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருந்தது.

இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த பகுதி பொதுமக்கள் கூறினர். மேலும் கோடை காலத்தில் குடிநீர் தேவை அதிகரித்து வருகிறது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பெரும் அவதிக்குள்ளாக நேரிடுமோ? என அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்தனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கண்ட பகுதியை நேரில் பார்வையிட்டு குடிநீர் குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பை உடனடியாக சரிசெய்து தண்ணீர் வீணாவதை தடுத்து, தட்டுப்பாடு இல்லாமல் குடிநீர் வழங்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இதுகுறித்த செய்தி நேற்று முன்தினம் 'தினத்தந்தி' நாளிதழில் படத்துடன் வெளியானது. இதையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக குழாயில் உடைப்பு ஏற்பட்ட இடத்திற்கு சென்று பொக்லின் எந்திரம் மூலம் குடிநீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்தனர். இதையடுத்து நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

# நுங்கம்பாக்கம் மதுபான பார் வழக்கில் திருப்பம்:போலீஸ் சப்இன்ஸ்பெக்டர், ஏட்டு அதிரடி கைது



சென்னை, ஜூன் 7

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மதுபாரில் நடந்த அடிதடி மோதல் சம்பவம் தொடர்பான வழக்கில், திடுக்கிடும் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில், ஓய்வுபெற்ற போலீஸ் சூப்பிரண்டின் மகன் செல்வபாரதி முதலில் கைது செய்யப்பட்டார். பின்னர் அவரது எதிர் தரப்பை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர்களான அஜய் ரோகன், பிரசாத், நடிகர் கருணாசின் முக்குலத்தோர் புலிப்படை கட்சியை சேர்ந்த நாகேந்திர சேதுபதி ஆகியோர் கைதானார்கள். கைதான 4 பேர்களிடமும், தற்போது போலீஸ் காவலில் விசாரணை நடக்கிறது.

இந்த நிலையில் இந்த வழக்கில் தி.மு.க. பிரமுகரும், கிழக்கு கடற்கரை சாலையில் தூண்டில் என்ற ஓட்டலை நடத்தி வந்தவருமான தூண்டில் ராஜா என்பவர் மராட்டிய மாநிலம் புனேவில் வைத்து கைது செய்யப்பட்டார். அவர் நேற்று காலை, சென்னை அழைத்து வரப்பட்டார். அவரிடம், தீவிர விசாரணை நடத்தப்பட்டது. அவர் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்படுவார் என்று போலீசார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், அ.தி.மு.க. பிரமுகர் பிரசாத் மீது மோசடி வழக்கு ஒன்று நிலுவையில் இருந்தது. அரசு வேலை வாங்கி தருவதாக சேலத்தை சேர்ந்த குழந்தை வேலு என்பவரிடமும், அசோக்குமார் என்பவரிடமும் ரூ.16 லட்சம் வாங்கி அபகரித்ததாக அவர் மீதான வழக்கில் குற்றச்சாட்டுகள் இருந்தன. இந்த மோசடி வழக்கிலும், பிரசாத் கைது செய்யப்பட்டார். பிரசாத்தின் மோசடி லீலைகளுக்கு உறுதுணையாக செயல்பட்டதாக, கோவை பயங்கரவாதிகள் தடுப்பு பிரிவில் சப்இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்த மணித்துரை என்பவரையும், மதுரையை சேர்ந்த ஆயுதப் படை போலீஸ் ஏட்டு செந்தில்குமார் என்பவரையும் அழைத்து வந்து

நேற்று நுங்கம்பாக்கம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். தீவிர விசாரணைக்கு பிறகு, நேற்று மாலை அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாக தெரிய வந்தது. கைதான செந்தில் குமார், வெங்கடேசன் எம்.பி.யிடம் பாதுகாப்பு அதிகாரியாகவும் பணியாற்றி வந்தார். இந்த வழக்கில் சப்இன்ஸ்பெக்டரும், போலீஸ் ஏட்டும் கைது செய்யப்பட்ட சம்பவம் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

# குரூப் 1 தேர்வுக்கான ஹால்டிக்கெட் வெளியீடு

சென்னை, ஜூன் 7

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) நடத்தும் பல்வேறு போட்டி தேர்வுகளை எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை தேர்வாணையம் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

இதன்படி, குரூப் 1 மற்றும் குரூப் 1 ஏ பணிகளுக்கான தேர்வு பற்றிய அறிவிப்பாணையை டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டது. இதன்படி, ஜூன் 15ல் இந்த பணிகளுக்கான முதல்நிலை தேர்வு நடைபெறும். துணை கலெக்டர், டி.எஸ்.பி. உள்ளிட்ட 8 முக்கிய பதவிகளுக்கும் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன.

இந்த நிலையில் ஜூன் 15ம் தேதி நடைபெறவுள்ள குரூப் 1, 1ஏ தேர்வுக்கான ஹால்டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் தங்கள் ஹால்டிக்கெட்டுகளை tnpscexams.in என்ற இணையத்தில் விண்ணப்ப எண், பிறந்த தேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து ஹால்டிக்கெட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

7.6.2025

# 35 நாட்களுக்கு பிறகு மீண்டும் திறப்பு: பாலருவியில் சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்



செங்கோட்டை, ஜூன் 7

தமிழககேரள எல்லையில் உள்ள ஆரியங்காவு பகுதியில் பாலருவி அமைந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 28ந்தேதி கடும் வறட்சி காரணமாக பாலருவி மறு அறிவிப்பு வரும் வரை மூடப்படுவதாக கேரளா வனத்துறை சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய நிலையில் கடந்த சில தினங்களாக பாலருவி நீர் வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

இதையடுத்து 35 நாட்களுக்கு பிறகு நேற்று முதல் பாலருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்கு அடுத்தபடியாக தமிழக கேரள எல்லை பகுதியில் உள்ள பாலருவி நீர்வீழ்ச்சிக்கு சென்று குடும்பத்துடன் குளித்து மகிழ்வது வழக்கம். அந்த வகையில், தற்போது பாலருவிநீர்வீழ்ச்சியில்குளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

அவர்கள் பாலருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

# ஆடிட்டர் குருமூர்த்தி ராமதாசை சந்தித்ததில் பா.ஜ.க.வுக்கு எந்த தொடர்பும் இல்லை நயினார் நாகேந்திரன் பேட்டி



சென்னை ஜூன் 7

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பெங்களூருவில் கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் இறந்த சம்பவத்துக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து கொள்கிறேன். அதில் ஒருவர் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையை சேர்ந்த காமாட்சி என்பது வேதனை அளிக்கிறது. கர்நாடகமாநிலத்தில் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் சரியான முறையில் ஏற்பாடு செய்யாமல் இருந்ததே உயிரிழப்பிற்கு காரணம்.

பா.ம.க.வில் நடக்கும் விவகாரம் அவர்களின் உட்கட்சி விவகாரம். அதை பேசுவது நாகரிகமாக இருக்காது. அப்பா, மகனுக்குஇடையேஇருக்கும்சொந்தபிரச்சினையை அவர்களே பேசி தீர்க்க வேண்டும். ஆடிட்டர்குருமூர்த்தி, சைதை துரைசாமி ஆகியோர் தனிப்பட்ட முறையில் பா.ம.க. தலைவர் ராமதாசை சந்தித்துள்ளனர். அதற்கும் பா.ஜ.க.வுக்கும் எந்த தொடர்பு இல்லை.

சமாதானம் அனைத்து இடங்களிலும் இருக்க வேண்டும். அனைவரும் ஓரணியில் இருந்து தி.மு.க.வை தோற்கடிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். இதற்காக த.வெ.க. தலைவர் விஜய்க்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மக்கள் சந்திப்பு பயணத்தை ஜூலையில் தொடங்க விஜய் திட்டம்



சென்னை ஜூன் 7

தமிழக வெற்றிக்கழகம்அடுத்தஆண்டு நடக்கும் சட்டசபை தேர்தலை சந்திக்க தயாராகி வருகிறது. இதற்காக கோவையில் பூத் கமிட்டி மாநாட்டை அக்கட்சி நடத்தியது. இதைத்தொடர்ந்து, திருச்சி, வேலூர், தருமபுரி, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் பூத் கமிட்டி மாநாடு நடத்த விஜய் முடிவு செய்துள்ளார்.

இதற்கான அறிவிப்பு இன்னும் சில நாட்களில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட இருக்கிறது. இதனிடையே அவர்நடித்து வரும்கடைசி படமான 'ஜனநாயகன்' படப்பிடிப்பும் நிறைவடைந்துவிட்டது. எனவே இனி முழு வீச்சில் தமிழகம் முழுவதும் கட்சி வளர்ச்சி பணிகளை முன்னெடுக்க விஜய் திட்டமிட்டுள்ளார்.

சட்டசபை தேர்தலுக்கு இன்னும், 10 மாதங்களே இருப்பதால், மக்கள் சந்திப்பு பயணத்தை நடத்துவதற்கான பணிகளில் விஜய் இறங்கி இருக்கிறார். இதற்கான வழித்தட அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. 42 நாட்கள் தொடர் மக்கள் சந்திப்பில் விஜய் ஈடுபட இருக்கிறார்.

ஜூலை 2வது வாரம் அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் இருந்து மக்கள் சந்திப்பு பயணத்தை தொடங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. திருச்சி அல்லது மதுரையில் இருந்து இதனை தொடங்கலாமா? என்று விஜய் யோசித்து வருகிறார். இதற்காக பிரசார வேனும் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மக்கள் சந்திப்பு தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை கட்சி மேலிடம் வழங்கியுள்ளது. மக்கள் சந்திப்பு வழித்தடம் தொடர்பாக மாவட்ட செயலாளர்களிடம் அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கட்சி நிர்வாகிகளுக்கு விஜய் உத்தரவு ஒன்றை பிறப்பித்து இருக்கிறார். அதில், 'கட்சி நிர்வாகிகளிடம் கோஷ்டி பூசல் எதுவும் இருக்க கூடாது, அப்படி ஏதாவது இருந்தால் கண்டிப்பாக அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள்.

நமது இலக்கு 2026 என்பதை மறந்து விடாதீர்கள், இலக்கை நோக்கி பயணிப்போம், நம்மை நோக்கி வரும் எதிர்ப்பு கணைகளை பற்றி கவலைப்படாதீர்கள், விமர்சனங்களுக்கு பதில் கொடுத்து நேரத்தை வீணாக்க வேண்டாம். நமக்கு இலக்கு மட்டும்தான் முக்கியம்' என்று கூறி இருக்கிறார்.

விஜய் மேற்கொள்ள இருக்கும் மக்கள் சந்திப்பு பயணம் குறித்து நிர்வாகிகள் கூறும்போது, 'தேர்தலுக்கு குறைவான காலமே இருக்கிறது. தற்போது எங்களுக்கு வார்டு மாநாடு, கட்சி ஆலோசனை கூட்டம் என்று பணிகள் நிறைய இருக்கிறது. சென்னையைத் தாண்டி எங்கள் தலைவரின் குரல் கிராமங்களில் ஒலிக்க இருக்கிறது. இந்த மக்கள் சந்திப்பை திருப்புமுனை சந்திப்பாக மாற்றி காட்டுவோம்' என்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (7.6.2025)

**மேஷம்** — பலன்: வேலை தொடர்பான நல்ல வாய்ப்பு. செல்வாக்கு அதிகரிக்கும். பரிகாரம்: ஹனுமான் வழிபாடு செய்து சக்தி பெறலாம்.

**ரிஷபம்** — பலன்: குடும்பத்தில் அமைதி. புதிய தொடர்புகள் உருவாகலாம். பரிகாரம்: வணிகத்திலும் பொருளாதாரத்துறையிலும்கவனம் தேவை.

**மிதுனம்** — பலன்: மதிப்பு கிடைக்கும் நாள். ஆனால்கடன்களில்கவனம்தேவை. பரிகாரம்: விநாயகர் பூஜை உதவும்.

**கடகம்** — பலன்: உடல்நலத்தில் வீழ்ச்சி. செலவுகள் அதிகரிக்கும். பரிகாரம்: சந்திர பகவானை வழிபடுங்கள்.

**சிம்மம்** — பலன்: எதிர்பாராத வருமானம். ஆனால் மனச்சோர்வு இருக்கலாம். பரிகாரம்: துர்கை அம்மன் வழிபாடு நல்லது.

**கன்னி** — பலன்: கல்வி, வேலை, விசாரணைகளில் சாதனை. பரிகாரம்: புத்திமதியான முடிவுகள் தேவை.

**துலாம்** — பலன்: குடும்பத்தில் மனசமரசல் ஏற்படும். நிதியில் கவனம் தேவை. பரிகாரம்: லட்சுமி பூஜை செய்து ஆற்றல் பெறுங்கள்.

**விருச்சிகம்** — பலன்: புதிய வாய்ப்புகள், பண வரவு. நண்பர்கள் உதவுவர். பரிகாரம்:சூரியனுக்குப்பிரார்த்தனை செய்யுங்கள்.

**தனுசு** — பலன்: தொழில்/வேலை முன்னேற்றம். மனதில் உற்சாகம். பரிகாரம்: குரு பகவானை வழிபடுங்கள்.

**மகரம்** — பலன்: பணத்தடை, உடல்நிலை கவலை. மதிப்பிழப்பும் சாத்தியம். பரிகாரம்: சனிபகவான் வழிபாடு அவசியம்.

**கும்பம்** — பலன்: புதிய முயற்சிகள் வெற்றி பெறும். உத்தியோக உயர்வு. பரிகாரம்: தன்னம்பிக்கை கொண்டு செயல்படுங்கள்.

**மீனம்** — பலன்: குடும்பத்தில் சுமுகம். ஆனால் பணத்தில் தாமதம். பரிகாரம்: நரசிம்மர் வழிபாடு நல்லது.

# திருப்பூர்: பனியன் மில்லில் பயங்கர தீ விபத்து ரூ.90 லட்சம் பொருட்கள் நாசம்




திருப்பூர், ஜூன் 7

திருப்பூர் மாவட்டம் கரைப்புதூர் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் (வயது 60) மற்றும் திருப்பூர் அனைப்பாளையம் பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் (34) ஆகியோர் இணைந்து மங்கலம் அருகே உள்ள பூமலூர் பகுதியில் தனியார் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து பனியன் கழிவுகளை பஞ்சாக அரைக்கும் மில் வைத்து நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் 6 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.அப்போது பனியன் கழிவுகளை பஞ்சாக அரைக்கும் எந்திரத்தில் தீ ஏற்பட்டது. இது குறித்து உடனடியாக போலீசார் மற்றும் பல்லடம் தீயணைப்புத்துறையினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் இந்த பயங்கர தீ விபத்தில் சுமார் ரூ. 90 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் எந்திரங்கள் நாசமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சிறுது பரபரப்பை ஏற்படுத்தியது.

# தமிழ் திரையுலகம் என் வீடு சிம்ரன்



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக கொடிகட்டி பறந்த சிம்ரன், தற்போது வில்லி மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் கலக்கி வருகிறார். பாலச்சந்தர் இயக்கிய பார்த்தாலே பரவசம், மணிரத்னம் இயக்கிய கன்னத்தில் முத்தமிட்டால், ராக்கெட்ரி ஆகிய படங்களில் மாதவனுடன் இணைந்து நடித்துள்ளார். இப்போது வரைக்கும் நடிகர் விஜய்க்கு சமமாக நடனம் ஆடிய ஒரே நடிகை என்ற பாராட்டைப் பெற்றவரும் அவர்தான். நடிகை சிம்ரன் திருமணத்துக்குப் பிறகு தற்போது மீண்டும் படங்களில் நடிக்க ஆரம்பித்துள்ளார்.

நாயகியாக அல்லாமல் நல்ல கதைகளில் துணைக் கதாபாத்திரங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் அஜித்குமாரின் 'குட் பேட் அக்லி' படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்து கவனம் ஈர்த்தார். . தற்போது, நடிகர் சசிகுமாருடன் 'டூரிஸ்ட் பேமிலி' படத்திலும் நடித்து கவனம் பெற்றுள்ளார். லோகேஷ் குமார் இயக்கி வரும் 'தி லாஸ்ட் ஒன்' படத்தில் நடித்து வருகிறார்.

அண்மையில் ஒரு நேர்காணலில் கலந்து கொண்ட சிம்ரன், "தனது வாழ்க்கைப் பயணம், தமிழ் திரையுலகம் மீதான பாசம் மற்றும் இந்தி சினிமாவில் வாய்ப்புகள் இருந்தும் ஏன் நடிக்கணும் என்று தோணல.." என்பன குறித்து மிக நேர்மையாகவும் உணர்வுபூர்வமாகவும் பேசியுள்ளார்.

சிம்ரன் கூறியதாவது,"நான் தமிழில் இருந்து இந்திக்கு போய் வேலை பண்ணனும் என்று ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. தமிழில் நடிப்பது எனக்கு சௌகர்யமாக இருக்கு. இது எங்க வீடு மாதிரி இருக்கு. எல்லாம் இயல்பா நடக்குது. தமிழில் வேலை செய்யும் மனிதர்கள் எல்லாரும் ரொம்ப சிம்பிள். பெரிய ஸ்டார் ஆக இருந்தாலும் கூட, சினிமா துறையில் உள்ள மனிதர்கள் மிகுந்த மனப்பான்மையோடு நடந்துகொள்கிறார்கள். அதுதான் எனக்கு பிடிக்கிற விஷயம்." எனவும் தெரிவித்திருந்தார்.

சிம்ரனுக்குப் பல இந்தி பட வாய்ப்புகள் வந்திருந்தன. ஹீரோயினாக, மற்றும் முக்கியமான துணைவேடங்களாக பணியாற்றும் வாய்ப்புகள் இருந்தாலும், சிம்ரன் தன்னுடைய பயணத்தை தமிழில் மட்டுமே தொடர விரும்பினார்.

# "மெட்ராஸ் மேட்னி" படத்தின் ஸ்னீக் பீக் வீடியோ வெளியீடு

அறிமுக இயக்குநரான கார்த்திகேயன் மணி இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'மெட்ராஸ் மேட்னி'. இப்படத்தில் காளி வெங்கட், சத்யராஜ், ரோஷினி ஹரிபிரியன், ஷெலி மற்றும் விஷ்வா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சமீபத்தில் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியானது.இப்படத்துக்கு கே.சி. பாலசரங்கன் இசையமைத்துள்ளார்.

இப்படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் வழங்க மெட்ராஸ் மோஷன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. பர்ஸ்ட் லுக் போஸ்டரில் ஒரு இளைஞன் பணியன் அணிந்துக் கொண்டு வீட்டு வாசலில் நிற்கிறான். அவன் வீட்டின் அருகில் உள்ள ஒரு கோவிலில் நாய் சிறுநீர் கழிக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. படத்தின் ஒளிப்பதிவை ஆனந்த் ஜி கே, படத்தொகுப்பு சதீஷ் குமார், கலை வடிவத்தை ஜாக்கி மேற்கொள்கின்றனர்.

'மெட்ராஸ் மேட்னி' படத்தின் 'என்னடா பொழப்பு இது' எனத்தொடங்கும் பாடலை நடிகர் வடிவேலு பாடியுள்ளார். 'மெட்ராஸ் மேட்னி' திரைப்படம் வரும் ஜூன் மாதம் 6ம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அதிகாரபூர்வமாக அறிவித்தது. 'மெட்ராஸ் மேட்னி' திரைப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 'மெட்ராஸ் மேட்னி' படத்தின் ஸ்னீக் பீக் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# லோகேஷ் கனகராஜுடன் இணையும் அமீர்கான்



தமிழ் சினிமாவில் மாநகரம் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் லோகேஷ் கனகராஜ். அதைத்தொடர்ந்து இவர் கைதி, மாஸ்டர், விக்ரம், லியோ ஆகிய படங்களை இயக்கி ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். இவர் அடுத்ததாக, ரஜினி நடிப்பில் 'கூலி' திரைப்படத்தை இயக்கி முடித்திருக்கிறார். மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் உருவாகி வரும் இந்த படமானது ஆகஸ்ட் 14ம் தேதி திரைக்கு வர தயாராகி வருகிறது. இந்த படத்தில் பிரபல பாலிவுட் நடிகர் அமீர்கான் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியானது. அதேசமயம் லோகேஷ் கனகராஜ், இயக்கத்தில் அமீர்கான் சூப்பர் ஹீரோ படம் ஒன்றில் நடிக்க போவதாக சொல்லப்பட்டது. அதாவது லோகேஷ் இயக்கத்தில் சூர்யா நடிக்க இருந்த 'இரும்புக்கை மாயாவி' திரைப்படத்தில் தான் அமீர்கான்நடிக்கஉள்ளார்எனபலதகவல்கள்சமூகவலைதளங்களில் உலா வருகிறது. இந்நிலையில் நடிகர் அமீர்கான் சமீபத்தில் நடந்த பேட்டியில், "நானும் லோகேஷ் கனகராஜும் ஒரு படத்தில் பணியாற்றவுள்ளோம். இது மிகப்பெரிய பட்ஜெட்டில் ஆக்ஷன் சூப்பர் ஹீரோ பாணி படமாக இருக்கும். கைதி 2 படத்திற்கு பிறகு அந்த படத்தை தொடங்க திட்டமிட்டு இருக்கிறோம். 2026ம் ஆண்டின் இறுதியில் இந்த படத்தை தொடங்கப் போகிறோம். 2027ல் இந்த படம் திரைக்கு வரும்" என்று தெரிவித்துள்ளார்.

அமீர்கான் குறிப்பிட்ட சூப்பர்ஹீரோகதை நடிகர் சூர்யாவுக்கு லோகேஷ் கனகராஜ் சொன்ன, 'இரும்பு கை மாயாவி'யாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் : பும்ரா அனைத்து போட்டிகளிலும் விளையாடுவாரா ? கம்பீர் விளக்கம்



இந்திய கிரிக்கெட் அணி இந்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியாஇங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் 20ந் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடரில் இந்திய அணி புதிய டெஸ்ட் கேப்டன் சுப்மன் கில் தலைமையில் விளையாட உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் இந்த தொடரின் 5 போட்டிகளிலும் பும்ரா விளையாட மாட்டார் என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கம்பீர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

பும்ரா 5 டெஸ்ட் போட்டியில் எந்த 3 போட்டியில் விளையாடுவார் என்பது முடிவு செய்யப்படவில்லை.எந்தெந்த போட்டிகளில் விளையாடுவார் என்பது குறித்து பும்ராவுடன் கலந்துபேசி முடிவு. பும்ரா தரமான பந்து வீச்சாளர்தான். அவரை போல தரமான பந்து வீச்சாளர்கள் போதுமான அளவு உள்ளனர். என தெரிவித்துள்ளனர் .

# டி.என்.பி.எல்: திண்டுக்கல் அணிக்கு 150 ரன்கள் இலக்கு நிர்ணயித்த கோவை

9வது டி.என்.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது. கோவை, சேலம், நெல்லை, திண்டுக்கல் ஆகிய நகரங்களில் மொத்தம் 32 ஆட்டங்கள் நடைபெறுகிறது. இந்த கிரிக்கெட் திருவிழாவில் நடப்பு சாம்பியன் திண்டுக்கல் டிராகன்ஸ், சேப்பாக் சூப்பர் கில்லீஸ், கோவை கிங்ஸ் உள்பட 8 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும். பிளேஆப் மற்றும் இறுதிப்போட்டி திண்டுக்கல்லில் நடக்கிறது. இதில் இன்று இரவு நடைபெறும் தொடக்க லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் திண்டுக்கல் டிராகன்ஸ், கடந்த ஆண்டு 2வது இடம் பிடித்த கோவை கிங்சை எதிர்கொள்கிறது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. அதில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணியின் கேப்டன் அஸ்வின் பந்துவீச்சை தேர்வு செய்தார் .அதன்படி கோவை அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்கத்தில் கோவை அணியில் விஷால் வைத்யா 6 ரன்கள், லோகேஷ்வர் 15 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தநர் . பின்னர் பாலசுப்பிரமணியன் சச்சின் சிறப்பாக விளையாடி ரன்கள். குவித்தார். அவர் அரைசதம் அடித்து அசத்தினார் . இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு கோவை அணி 149 ரன்கள் எடுத்தது .

இதனை தொடர்ந்து 150 ரன்கள் இலக்குடன் திண்டுக்கல் அணி விளையாடுகிறது

# பெங்களூரு அணி நிர்வாகத்தின் மீது வழக்குப்பதிவு




18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் இரவு நிறைவுபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு வெற்றி பெற்றது.ஐ.பி.எல்.வரலாற்றில்பெங்களூருஅணிகோப்பையை வெல்வது இதுவே முதல் முறை.இதனால் அந்த அணி ரசிகர்கள் மட்டுமின்றி, கர்நாடக மக்களும் அந்த வெற்றியை உற்சாகமாக கொண்டாடினர். இதையடுத்து, கோப்பையை வென்ற பெங்களூரு அணியின் வீரர்களுக்கு கர்நாடக அரசு சார்பில் பெங்களூரு விதானசவுதாவிலும் (சட்டசபை வளாகம்), பெங்களூரு அணி நிர்வாகம் சார்பில் பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்திலும் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.இதையொட்டி சின்னசாமி மைதானத்திற்கு ரசிகர்கள் அதிக அளவில் திரண்டு வந்தனர். இதனால் அங்கு கடும் கூட்ட நெரிசல் உண்டானது.நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. போதிய முன்னேற்பாடுகள் இன்றி வெற்றிக்கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்ததே இந்த துயர நிகழ்வுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.

இந்நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்த விவகாரத்தில் பெங்களூரு அணி நிர்வாகத்தின் மீது வழக்குப்பதிவு செய்யபட்டுள்ளது. கர்நாடக கிரிக்கெட் சங்க நிர்வாகம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.